ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1767/3 2012 ජූලි මස 16 වැනි සඳුදා - 2012.07.16

*1767/3 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### காடு பேணற் கட்டளைச் சட்டம்

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 "அ" ஆம் பிரிவின் கீழான கட்டளை*

### *கட்டளை*

*1966 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1979 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1982 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 84ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1995 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2009 ஆம் ஆண்டின் 65ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (451 ஆம் அத்தியாயமான) காடு பேணற் கட்டளைச் சட்டத்தின் 3 "அ" ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சுற்றாடல் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகிய நான், கீழ் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குள் உட்பட்ட 18,268,5554 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட ஹுருலு ஓயா ஒதுக்கு காட்டை 2012 ஆம் ஆண்டு ஓகத்து 16ஆந் திகதியிலிருந்து ஹுருலு ஓயா பேணற் காடு என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*அநுர பிரியதர்ஷன யாப்பா,*
*சுற்றாடல் அமைச்சர்.*

*சுற்றாடல் அமைச்சு,*
*பத்தரமுல்லை,*
*2012, மே 25.*

### *அட்டவணை*

*வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தின் ஹிங்குராகொட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அலுத் ஓயா, மொரகந்த மஹ மொரகந்த, மொரகஹகந்த, ஹதரெஸ்கொட்டுவ, தல்பெத்த மற்றும் ரத்மல கிராமத்தின் எவ்.ரீ.பீ 10 இன் துண்டு இலக்கம் 271 என அடையாளமிடப்பட்ட மொரஹின்ன அடர்ந்த காடு கும்புக் அடர்ந்த காடு, கருவலகஸ் அடர்ந்த காடு, மொரகஸ் அடர்ந்த காடு, ஹூருலு அடர்ந்த காடு, கஹடகஸ்ஹின்ன அடர்ந்த காடு, ஹபரன காடு, நிகவெவ அடர்ந்த காடு, வெலன்கஹ அடர்ந்த காடு, அலுத் ஓயா அடர்ந்த காடு, மொரகஹகந்த அடர்ந்த காடு, என்னும் காணிகளை ஒருங்கிணைத்தவாறான மொத்த காணிகளான ஹெக்டயார் 18,268,5554 விஸ்தீரணத்தைக் கொண்ட காட்டுப் பிரதேசம்.*

*வடக்கு : எவ். ரி. பி. 10 இன் துண்டு இலக்கம் அநுராதபுர மாவட்ட எல்லை ;*

*கிழக்கு : எவ். ரி. பி. 10 இன் துண்டு இலக்கம் 270, 275, 141, 142, 230, 272, 273 1/2, 273 2/2, 106, 120 1/2, 118, 274 மற்றும் எவ்: வி: பி: 883 (திம்பிரிகஸ்வெவ கிராமத்தின் பகுதியொன்று) ;*

*தெற்கு* : எவ். ரி. பி. 10 இன் துண்டு இலக்கம் 275, 273 2/2, 106, 120 1/2, 118, 274, எவ்: வி: பி: 883 மற்றும் அநுராதபுர மாவட்ட எல்லை;

*மேற்கு* : எவ். ரி. பி. 10 இன் துண்டு இலக்கம் அநுராதபுர மாவட்ட எல்லை

*விஸ்தீரணம் (ஹெக்டயர்:0 18,268.5554*

*08- 14*

---

*திருத்தம்*

**காடு பேணற் கட்டளைச் சட்டம்**

*2011.11.18 ஆந் திகதியிட்ட 1731/12 ஆம் இலக்கத்தைக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் I வது பகுதியின் (I) வது தொகுதியின் அறிவிப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 2 A ஆம் பக்கத்தின் 2 வது பந்தியின் ஐந்தாவது வரிசையில் குறிப்பிடப்பட்டுள்ள வெஹெரகல கல்எலிய காடு எனப்படுவது வெஹெரகல கல்எலிய ஒதுக்குக் காடு எனத் திருத்தம் செய்யப்படல் வேண்டும்.*

அநுர பிரியதர்ஷன யாப்பா,
சுற்றாடல் அமைச்சர்.

சுற்றாடல் அமைச்சு,
பத்தரமுல்லை,
2012, ஏப்பிறல் 20.

*8-15*